<u>முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

முன்னிலை - திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,

2026 ம் வருடம் மார்ச் மாதம் 02 ம்நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ விசுவாவசு வருடம்-மாசி திங்கள் 18 ம்நாள்)

<u>இடைநிலை மனு எண்.9/2026</u>
அசல் வழக்கு எண்.23/2014

கருணாமூர்த்தி .. மனுதாரர்/
21 ம் பிரதிவாதி

// எதிர் //

1.கே.குமார்
2.கல்பனா .. எதிர்மனுதாரர்கள்/
வாதிகள்

26.02.2026 ம் தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 9, விதி 7 மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக 07.10.2025 ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவும் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 02.03.2026 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.எஸ்.நேசமணி, வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.எஸ்.துரைசாமி, வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

<u>உத்தரவு</u>

அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக 07.10.2025ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவும், இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ளவும் வேண்டுமென்று கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனு உரையின் சுருக்கம்:</u>

மனுதாரர் வழக்கில் 21ம் பிரதிவாதி ஆவார். வாதிகள் பாகப்பிரிவினை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கு இருதரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டது. இவ்வழக்கின் 19ம் பிரதிவாதியான இம்மனுதாரரின் தாயார் பார்வதி கடந்த 26.09.2021ல் மனுதாரரை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். அவருக்கு தாவா சொத்தில் 1/10 பாகம் உள்ளது. மனுதாரரை தரப்பினராக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்ததில் கொரியர் அஞ்சல் மூலமாக நோட்டீஸ் சார்வு செய்ய உத்தரவு போடப்பட்டுள்ளதில் மனுதாரருக்கு சரியாக சார்வு ஆகவில்லை. பின்னிட்டு தமிழ் நாளிதழில் பொது அறிவிப்பு மூலம் 07.10.2025ல் அறிவிப்பு கொடுக்கப்பட்டு, அன்றைய தேதியில் மனுதாரர் ஆஜரில்லை என்பதால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மனுதாரர் பெங்களூரில் பணிபுரிந்து வருவதால், 07.10.2025ல் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு தெரிய வரவில்லை. இந்த வழக்குடன் கூடிய இன்னொரு வழக்கான அ.வ.எண்.167/2016 என்ற வழக்கில் ஈரோடு, இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜரான போது தான் மேற்படி விபரம் மனுதாரருக்கு தெரிய வந்தது. ஆகவே மனுதாரர் மீது பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து, இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை ஏற்றுக் கொண்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும். இல்லையேல் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும்.

3. 1ம் <u>எதிர்மனுதாரர் தரப்பில் செய்யப்பட்டு, 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்:</u>

இந்த மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரால்

ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். இந்த எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்படுவது யாதெனில், வழக்கை நீட்டிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் காலம் கடந்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தில் மனுதாரரின் தாயாரான 18ம் பிரதிவாதிக்கு எவ்வித பங்குரிமையும் இல்லை. அவர் 1996லேயே 2,3 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துவிட்டார். மனுதாரரின் தாயார் இந்து வாரிசுரிமை சட்டம் 1/1990ன் கீழ் பங்குரிமை பெற தகுதியுடையவர் அல்ல. வெகு காலத்திற்கு முன்பே திருமணம் ஆகி சென்றுவிட்டார். அவருடைய வாரிசுகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. இம்மனு அனுமதிக்கும்பட்சத்தில் பதிலுரை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும். மனுவில் தகுதிபாடு இல்லை. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

5. <u>பிரச்சினைக்குத் தீர்வு:-</u>

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு கோப்பு பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் இவ்வழக்கின் 19ம் பிரதிவாதியான இம்மனுதாரரின் தாயார் பார்வதி கடந்த 26.09.2021ல் மனுதாரரை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டதால் மனுதாரரை வாரிசாக சேர்க்க கோரி தாக்கல் செய்த இடைநிலை மனுவில் நோட்டீஸ் சார்வு செய்யப்படவில்லை என்றும், தினசரி நாளிதழில் கொடுக்கப்பட்ட அறிவிப்புக்கு பின்னிட்டு மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜரில்லை என்பதால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டதாகவும், மனுதாரர் பெங்களூரில் பணிபுரிந்து வருவதால், 07.10.2025ல் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு தெரிய வரவில்லை என்றும், இந்த வழக்குடன் கூடிய இன்னொரு வழக்கான அ.வ.எண்.167/2016 என்ற வழக்கில் ஈரோடு, இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜரான போது தான் மேற்படி விபரம் மனுதாரருக்கு தெரிய வந்ததாகவும், ஆகவே மனுதாரர் மீது பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்தில் மனுதாரரின் தாயாரான 18ம் பிரதிவாதிக்கு எவ்வித பங்குரிமையும் இல்லை என்றும், அவர் 1996லேயே 2,3 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துவிட்டதாகவும், மனுதாரரின் தாயார் இந்து வாரிசுரிமை சட்டம் 1/1990ன் கீழ் பங்குரிமை பெற தகுதியுடையவர் அல்ல என்றும், அவருடைய வாரிசுகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், வழக்கை நீட்டிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர் காலம் கடந்து இம்மனு தாக்கல் செய்துள்ளதாக ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 18ம் பிரதிவாதிக்கு சொத்தில் உரிமை இல்லை என்று மறுக்கப்பட்டுள்ளது. 18ம் பிரதிவாதிக்கு சொத்தில் உரிமை உள்ளதா, இல்லை என்பதை பொறுத்து அசல் வழக்கில் தான் தீர்மானிக்க இயலும். 18ம் பிரதிவாதியின் வாரிசான மனுதாரரை இவ்வழக்கில் சேர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மனுதாரருக்கு தெரியவில்லை என்று சொல்லியிருக்கும் காரணம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக ஆட்சேபணை செய்யப்பட்டு இருப்பினும், மனுதாரருக்கு அவருடைய எதிர்வாதத்தை நிரூபிக்கும் பொருட்டு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதாலும், இவ்வழக்கு 2014ல் தாக்கல் செய்யப்பட்டு தற்போது வழக்கு வாதுரைக்காக போடப்பட்டு, வழக்கு முடியும் தருவாயில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும் செலவு தொகையுடன் இம்மனுவை அனுமதிக்கலாம் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது

**முடிவாக,** மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு செலவு தொகையாக ரூ.2000/-ஐ வருகின்ற 06.03.2026ம் தேதிக்குள் நேரடியாக செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறினால் தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 06.03.2026.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில்

சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ம் வருடம் மார்ச் மாதம் 02 ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S EZHIL Digitally signed by S EZHIL Date: 2026.03.02 19:17:14 +0530

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,
ஈரோடு

<u>சாட்சிய சான்றாவணப் பட்டியல்</u>
(..இருதரப்பில் தாக்கல் இல்லை ..)

S EZHIL Digitally signed by S EZHIL Date: 2026.03.02 19:17:20 +0530

மு.கூ.மா.நீ., ஈரோடு.

<u>அசல்/வரைவு உத்தரவு</u>
<u>இ.ம.எண்.9/2026</u>
அ.வ.எண்.23/2014
நாள் 02.03.2026
மு..கூ.மா.நீ.ம., ஈரோடு.